Q.C - 061

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Hindu Religious and Charitable Endowments (Admn.) Department Test – First Paper (Without Books) | 141 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour                                    Maximum Marks: 100

***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display the remaining time as **Time Left**. At the beginning of exam, timer will show

1. The HR and CE Act extends to the
இந்து சமய அறநிலைய சட்டம் எந்த பகுதிக்குப் பொருந்தும்

(A) The whole of India
இந்திய நாடு முழுவதும்

(B) The states of Tamil Nadu and Pandicherry
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்கள்

(C) The whole of the state of Tamil Nadu
தமிழ்நாடு மாநிலம் முழுவதும்

(D) Certain parts of state
தமிழ்நாட்டில் ஒருசில பகுதிகளில் மட்டும்

2. Section 3 of the Act deals with
இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 3 எதைப் பற்றி கூறுகிறது

(A) Jain Religious Institution
ஜெயின் சமய நிறுவனங்கள்

(B) Jain Public Charitable Endowments
ஜெயின் பொது அறநிலையங்கள்

(C) Hindu or Jain Public Charitable Endowments
இந்து அல்லது ஜெயின் பொது அறநிலையங்கள்

(D) Maths
மடங்கள்

3. The assent was given to the HR and CE Act 1959 by
1959-ன் இந்து சமய அறநிலையச் சட்டத்திற்கு யாரால் ஒப்புதல் வழங்கப்பட்டது

(A) President of India
இந்திய ஜனாதிபதி

(B) Govt. of Tamilnadu
தமிழ்நாடு அரசு

(C) Govt. of India
இந்திய அரசு

(D) Governor of Tamilnadu
தமிழ்நாடு கவர்னர்

4. The Govt. have powers to extend the Act to Jain Religious Institutions and Endoments under
ஜெயின் சமய நிறுவனங்களுக்கு இந்து சமய அறநிலைய சட்டத்தை எந்த பிரிவின் கீழ் அமுல்படுத்தலாம்

(A) Sec. 4
சட்டப்பிரிவு 4

(B) Sec. 1
சட்டப்பிரிவு 1

(C) Sec. 6
சட்டப்பிரிவு 6

(D) Sec. 2
சட்டப்பிரிவு 2

5. Under which section Executive Officer is appointed in temples
எந்த சட்டப்பிரிவின் கீழ் திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர் நியமிக்கப்படுகிறார்.

(A) 43-A

(B) 53-A

(C) 44-A

(D) 45

6. If a Hereditary Trustee has a disqualification, he may be suspended under
பரம்பரை அறங்காவலரை தகுதியின்மை காரணமாக எந்த பிரிவின் கீழ் நீக்கம் செய்யலாம்

(A) Sec. 24(2)
பிரிவு 24(2)

(B) Sec. 53(2)
பிரிவு 53(2)

(C) Sec. 26(4)
பிரிவு 26(4)

(D) Sec. 54
பிரிவு 54

7. A Trustee shall cease to hold office if he absents from
அறங்காவலர் எத்தனை குழுக் கூட்டத்திற்கு வராமல் இருந்தால் நீக்கம் செய்யலாம்?

(A) One meeting
ஒரு கூட்டம்

(B) Two consecutive meeting
அடுத்தடுத்த 2 கூட்டங்கள்

(C) Three consecutive meeting
அடுத்தடுத்த 3 கூட்டங்கள்

(D) Many meetings
பல கூட்டங்கள்

8. When a scheme is pending before the Joint Commissioner a Fit Person can be appointed by the
இணை ஆணையர் முன்பாக நிர்வாகத் திட்டம் ஏற்படுத்த நிலுவையில் இருக்கும்போது தக்காரை யார் நியமனம் செய்யலாம்

(A) Commissioner
ஆணையர்

(B) Govt.
அரசு

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

9. The Commissioner can settle scheme for the proper administration of
நிர்வாகத் திட்டம் ஆணையரால் எந்த நிறுவனத்தின் நிர்வாகத் திட்டம் ஏற்படுத்த அதிகாரம் உள்ளது

(A) Temple
திருக்கோயில்

(B) Jain Religious institutions
ஜெயின் சமய நிறுவனங்கள்

(C) Specific Endowment attached to math
மடத்துடன் இணைந்த குறிப்பிட்ட கட்டளைகள்

(D) Charitable Endowment
அறநிலையங்கள்

10. Under which section Executive Officer is appointed to Math.
எந்த சட்டப்பிரிவின் கீழ் மடங்களுக்கு செயல் அலுவலரை நியமனம் செய்யலாம்

(A) 43-A

(B) 44

(C) 46

(D) 42

11. The Assistant Commissioner has powers to appoint Trustees under
எந்த சட்டப்பிரிவின் கீழ் அறங்காவலரை நியமிப்பதற்கு உதவி ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

(A) 42

(B) 44

(C) 46(a)

(D) 49

12. Under Section 21 who has powers
சட்டப்பிரிவு 21ன் கீழ் யாருக்கு அதிகாரம் உள்ளது.

(A) The Commissioner
ஆணையர்

(B) The Joint Commissioner
இணை ஆணையர்

(C) The Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) The Trustee
அறங்காவலர்கள்

13. Disqualification of trustees are dealt with in
அறங்காவலர்களின் தகுதியின்மைக் குறித்து எந்த பிரிவில் கூறப்பட்டுள்ளது

(A) Sec.25
பிரிவு 25

(B) Sec.25(A)
பிரிவு 25(A)

(C) Sec.26
பிரிவு 26

(D) Sec.26(A)
பிரிவு 26(A)

14. Sec.29 deals with
சட்டப்பிரிவு 29ன் கீழ் எது விவாதிக்கப்பட்டுள்ளது.

(A) Annual verification
வருடாந்திர சரிபார்ப்புச் சான்றிதழ்

(B) Submission of accounts
கணக்குகள் சமர்ப்பித்தல்

(C) Inspection of documents
ஆவணங்கள் ஆய்வு

(D) Preparation of Registers
பதிவேடுகள் தயாரித்தல்

15. When the properties of a math is within Tamilnadu Control shall be exercised over the math under section
ஒரு மடத்தின் சொத்து தமிழ்நாட்டில் உள்ள போது எந்த சட்டப்பிரிவின் கீழ் அந்த மடத்தை கட்டுப்படுத்த முடியும்?

(A) Section 6(10)
பிரிவு 6(10)

(B) Section 6(13)
பிரிவு 6(13)

(C) Section 43(A)
பிரிவு 43(A)

(D) Section 47
பிரிவு 47

16. Defunct religious institutions are dealt with under Sec.
செயல்பாடாத அறநிலையங்களைப் பற்றி எந்த பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) Sec. 70
பிரிவு 70

(B) Sec. 67
பிரிவு 67

(C) Sec. 73
பிரிவு 73

(D) Sec. 75
பிரிவு 75

17. Trustee of a Math can be removed by
மடங்களுக்கான அறங்காவலர்களை நீக்குவதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது

(A) The Commissioner
ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Court
நீதிமன்றம்

18. When a vacancy occurs in the office of the Trustee of a math arrangements can be made by
மடத்தின் அறங்காவலர் பதவி காலியாகும் போது, இடைக்கால ஏற்பாடுகள் யாரால் செய்யப்படும்

(A) The Commissioner
ஆணையர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Court
நீதிமன்றம்

19. Utilizing surplus funds for feeding the poor can be done under Sec.
ஏழைகளுக்கு உணவளிப்பதற்கான திருக்கோயில் உபரி நிதியை பயன்படுத்த எந்த பிரிவில் வழிவகுக்கப்பட்டுள்ளது?

(A) Sec.35
பிரிவு 35

(B) Sec.36(B)
பிரிவு 36(பி)

(C) Sec.37
பிரிவு 37

(D) Sec.38
பிரிவு 38

20. Notified religious institutions are dealt with in
அறிவிக்கை செய்யப்பட்ட சமய நிறுவனங்கள் எந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளது

(A) Sec.69
பிரிவு 69

(B) Sec.66
பிரிவு 66

(C) Sec.70
பிரிவு 70

(D) Sec.71
பிரிவு 71

21. Encroachment of temple lands is dealt with under
திருக்கோயில் நிலங்கள் ஆக்ரமிப்பு பற்றி எந்தப் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது?

(A) Sec.69
பிரிவு 69

(B) Sec.54
பிரிவு 54

(C) Sec.78
பிரிவு 78

(D) Sec.101
பிரிவு 101

22. Eviction from encroachment of temple land has to be done by
திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பினை நீக்குவதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) The Commissioner
ஆணையர்

(B) The Govt.
அரசு

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

23. Under Sec.74 Executive Officer is appointed
சட்டப்பிரிவு 74ன் கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்யப்படுவது யாரால்

(A) By the Govt.
அரசு

(B) By the Commissioner
ஆணையர்

(C) By the Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) By the Joint Commissioner
இணை ஆணையர்

24. Resumption of inam grant for performance of service under
இனாம் மானியத்தை மீண்டும் தொங்குவதற்கு எந்த சட்டப்பிரிவில் வழி வகுக்கப்பட்டுள்ளது.

(A) Sec.39
பிரிவு 39

(B) Sec.35
பிரிவு 35

(C) Sec.41
பிரிவு 41

(D) Sec.44
பிரிவு 44

25. Budget of Religious Institution shall be submitted before
சமய நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டம் எந்தத் தேதிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(A) before the end of fasli year
பசலி ஆண்டு முடிவதற்கு முன்பாக

(B) before the 30th June
ஜூன் 30க்கு முன்பாக

(C) before the 31st March
மார்ச் 31க்கு முன்பாக

(D) Before 31st of December
டிசம்பர் 31க்கு முன்பாக

26. Surcharge notice for any loss pointed out in the audit report shall be issued under
தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள இழப்பினை ஈடு செய்ய எந்தப் பிரிவின் கீழ் பொறுப்பு நிர்ணய அறிவிப்பு அனுப்பப்படும்?

(A) Sec.89
பிரிவு 89

(B) Sec.87
பிரிவு 87

(C) Sec.90
பிரிவு 90

(D) Sec.92
பிரிவு 92

27. Section 93 deals with
பிரிவு 93 எதைப் பற்றி விவாதிக்கிறது?

(A) Levy of contribution
உதவித் தொகை நிர்ணயம்

(B) Recovery of legal expenses
நீதிமன்ற செலவு திரும்பப் பெறுதல்

(C) Assessment of Audit fees?
தணிக்கை தொகை நிர்ணயம் செய்தல்

(D) Exemption from contribution
உதவித் தொகை நிர்ணயத்திலிருந்து விலக்களித்தல்

28. Under Sec.97 the Commissioner has powers to create
பிரிவு 97ன்கீழ் ஆணையருக்கு எந்த நிதி ஏற்படுத்த அதிகாரம் உள்ளது?

(A) Religious and Charitable Endowment administration fund
சமய மற்றும் அறக்கட்டளை நிர்வாக நிதி

(B) Religious and Charitable Endowment common good fund
சமய மற்றும் அறக்கட்டளைகள் நிர்வாக பொது நல நிதி

(C) Devaswoms board fund
தேவஸ்வம் வாரிய நிதி

(D) Fund for unincorporated Devaswoms board
இணைக்கப்படாத தேவஸ்வம் வாரிய நிதி

29. Who has powers to suspend a temple servant?
திருக்கோயில் பணியாளரை தற்காலிக பணி நீக்கம் செய்ய யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) The Govt.
அரசு

(B) The Joint Commissioner
இணை ஆணையர்

(C) The Trustee
அறங்காவலர்

(D) The Assistant Commissioner
உதவி ஆணையர்

30. In respect of a non-listed temple the trustee can be suspended by
பட்டியலில் சேராத திருக்கோயிலின் அறங்காவலரை தற்காலிக பதவி நீக்கம் செய்ய யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) The Commissioner
ஆணையர்

(B) The Joint Commissioner
இணை ஆணையர்

(C) The Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) The Govt.
அரசு

31. A suit, application, appeal, can be withdrawn with the sanction of
வழக்கு, மனு மேல்முறையீடு ஆகியவற்றை திரும்பப் பெறுவதற்கான அனுமதி யாரால் வழங்கப்பட வேண்டும்?

(A) The Govt.
அரசு

(B) The Commissioner
ஆணையர்

(C) The Joint Commissioner
இணை ஆணையர்

(D) The Assistant Commissioner
உதவி ஆணையர்

32. No office bearer or a temple servant can be in possession of Jewels and Valuables as per
எந்த சட்டப்பிரிவில் திருக்கோயில் பணியாளர் / பதவியில் உள்ளவர் திருக்கோயில் நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகளை தன் பொறுப்பில் வைத்திருக்கக்கூடாது?

(A) Sec.42
பிரிவு 42

(B) Sec.44
பிரிவு 44

(C) Sec.38
பிரிவு 38

(D) Sec.43A
பிரிவு 43A

33. What is the name of the year followed in religious institutions
திருக்கோயில்களில் எந்த வருடமுறை பயன்படுத்தப்படுகிறது?

(A) Calendar year
காலண்டர் ஆண்டு

(B) Financial year
நிதி ஆண்டு

(C) Sanskrit
சமஸ்கிருதம்

(D) Fasli year
பசலி ஆண்டு

34. Under which provisions math is explained?
எந்த பிரிவின் கீழ் மடம் என்பது விளக்கப்பட்டுள்ளது?

(A) Section 6(11)
பிரிவு 6(11)

(B) Section 6(13)
பிரிவு 6(13)

(C) Section 6(15)
பிரிவு 6(15)

(D) Section 6(8)
பிரிவு 6(8)

35. Section 6 (12A) deals with what?
பிரிவு 6 (12A) எதைப் பற்றி விளக்குகிறது?

(A) Executive Officer
செயல் அலுவலர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Superintendent
கண்காணிப்பாளர்

(D) Inspector
ஆய்வர்

36. Under which section territory of Assistant Commissioner is defined.
எந்த பிரிவின்கீழ் உதவி ஆணையரின் ஆட்சி வரம்பு வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) Section 13
பிரிவு 13

(B) Section 14
பிரிவு 14

(C) Section 17
பிரிவு 17

(D) Section 18
பிரிவு 18

37. A welfare board is functioning in the department for
கீழ்க்காணும் எந்த பிரிவினருக்கான துறையில் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது

(A) Archagas
அர்ச்சகர்கள்

(B) Odhuvars
ஓதுவார்கள்

(C) Nambudhuris
நம்பூதிரிகள்

(D) Boojaris
பூசாரிகள்

38. The Advisory committee is constituted by
ஆலோசனை கமிட்டி யாரால் அமைக்கப்படுகிறது?

(A) State Government
மாநில அரசு

(B) Commissioner
ஆணையர்

(C) Central Government
மத்திய அரசு

(D) Revenue Department
வருவாய்துறை

39. The qualification of the trustees are dealt with under
அறங்காவலர்களின் தகுதி குறித்து எந்த பிரிவில் கோரப்பட்டுள்ளது.

(A) Section 25
பிரிவு 25

(B) Section 26
பிரிவு '26

(C) Section 45
பிரிவு 45

(D) Section 47
பிரிவு 47

40. The surplus funds of the religious institutions cannot be utilized by the commissioner
திருக்கோயிலின் உபரி நிதியை ஆணையரால் எதற்காக பயன்படுத்த முடியாது?

(A) Construction of Kalyana mandapam
திருமண மண்டபம் கட்டுவதற்கு

(B) Hindu Marriages
இந்து திருமணங்கள்

(C) For Providing food to the poor
ஏழைகளுக்கு உணவளித்தல்

(D) Construction of Shed for giving food to the poor
ஏழைகளுக்கு உணவு அளிப்பதற்காக கட்டிடம் அமைத்தல்

41. Who has powers to suspend a Trustee appointed under section 46(iii)
46(iii)ன் கீழ் நியமிக்கப்பட்ட அறங்காவலர்களை தற்காலிக பணி நீக்கம் செய்ய யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) The Government
அரசு

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

42. The consolidated register shall be submitted to the Commissioner
தொகுக்கப்பட்ட பதிவேடு ஆணையருக்கு எப்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்

(A) Once in three years
மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை

(B) Once in five years
ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை

(C) Once in seven years
ஏழாண்டுகளுக்கு ஒருமுறை

(D) Once in ten years
பத்தாண்டுகளுக்கு ஒருமுறை

43. Any suit relating to a religious institutions can be compromised by
திருக்கோயில்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை சமரசம் செய்ய யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) The Government
அரசு

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Trustee
அறங்காவலர்

44. Under which the Joint Commissioner can decide the character of a religious institutions
எந்த பிரிவின் கீழ் சமய நிறுவனத்தின் தன்மையை இணை ஆணையர் நிர்ணயம் செய்யலாம்

(A) Section 63
சட்டப்பிரிவு 63

(B) Section 64
சட்டப்பிரிவு 64

(C) Section 62(g)
சட்டப்பிரிவு 62(ஜி)

(D) Section 64(c)
சட்டப்பிரிவு 64(சி)

45. Government order No. 456/TD /9.11.2007 deals
அரசு ஆணை எண். 456 / த.வ.து / 9.11.2007 எதைப் பற்றி கூறுகிறது

(A) Providing food to the poor
ஏழை மக்களுக்கு உணவு வழங்குதல்

(B) Free Marriages
இலவச திருமணங்கள்

(C) Fixation of Fair rent
நியாய வாடகை நிர்ணயம்

(D) Utilization of surplus funds
உபரி நிதியை பயன்படுத்துதல்

46. Purpose of 1959 act is to consoliate the law relating to
1959ம் வருட சட்டம் எதனை ஒருங்கிணைப்பதற்கு ஏற்படுத்தப்பட்டது?

(A) All Hindu Religious and Charitable Endowments
அனைத்து இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

(B) Jain Religious Institutions
ஜெயின் சமய நிறுவனங்கள்

(C) In Comported Dewosoms
இணைக்கப்பட்ட தேவஸ்வம்

(D) Welfare of Adi-Dravida Temples
கிராம திருக்கோயில்கள் நலம்

47. Who has powers to make rules under Section 116?
சட்டப்பிரிவு 116ன் கீழ் விதிகளை ஏற்படுத்த யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) The Commissioner
ஆணையர்

(B) The Joint Commissioner
இணை ஆணையர்

(C) Government
அரசு

(D) The Assistant Commissioner
உதவி ஆணையர்

48. Under section 36 Surplus funds cannot be used for
சட்டப்பிரிவு 36ன் கீழ் உபரி நிதியை எதற்கு பயன்படுத்த முடியாது

(A) Feeding poor
ஏழை மக்களுக்கு உணவளித்தல்

(B) Hindu Marriages
இந்து திருமணங்கள்

(C) Establishment of schools for Thevaram
தேவாரப் பள்ளிகள் ஏற்படுத்துதல்

(D) Contribution to provident fund
பொது நலநிதிக்கு தொகை வழங்குதல்

49. Appeal against the orders under section 66 can made to
சட்டப்பிரிவு 66ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து யாருக்கு முறையீடு செய்யலாம்?

(A) The Government
அரசு

(B) The Commissioner
ஆணையர்

(C) The District Court
மாவட்ட நீதிமன்றம்

(D) High Court
உயர்நீதிமன்றம்

50. Recovery for arrears of religious instruction can made under section
திருக்கோயில்களுக்கு வரவேண்டிய நிலுவை தொகைகளை பிடித்தம் செய்ய எந்த பிரிவில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(A) 79

(B) 79 A

(C) 79 B

(D) 79 C

51. An Appeal against the orders of tribunal can be made to
தீர்ப்பாயத்தின் உத்தரவின் மீது யாருக்கு முறையீடு செய்யலாம்?

(A) The Government
அரசு

(B) The Commissioner
ஆணையர்

(C) The Joint Commissioner
இணை ஆணையர்

(D) Court
நீதிமன்றம்

52. Joint Commissioner can't frame a scheme of administration for
இணை ஆணையர் நிர்வாக திட்டத்தை எந்த நிறுவனத்திற்கு ஏற்படுத்த முடியாது

(A) Math
மடம்

(B) Listed Religious Instruction
பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்

(C) Non Listed Instructions
பட்டியலில் சேராத திருக்கோயில்

(D) Notified Religious Instructions
அறிவிக்கை செய்யப்பட்ட சமய நிறுவனம்

53. Section 115 related to
பிரிவு 115 எதைப் பற்றியது?

(A) Power of Government to reiew
அரசின் மறு ஆய்வு அதிகாரம்

(B) Limitation
கால வரையறை

(C) Unincorporated Devaswoms
இணைக்கப்படாத திருக்கோயில்கள்

(D) Inspection
ஆய்வு

54. Section 6 (17) defines the term
பிரிவு 6(17) வரையறை செய்யும் பதம்

(A) Inam
இனாம்

(B) Temple
திருக்கோயில்

(C) Religious endowment
சமய அறக்கட்டளை

(D) Mutt
மடம்

55. A Person shall be disqualified for being appointed as a trustee of any religious institution if he is
ஒரு நபர் ஒரு மத நிறுவனத்தின் அறங்காவலராக நியமிக்க கீழ்கண்டவற்றுள் எப்போது தகுதியற்றவராகிறார்

(A) less than 30 years of age
30 வயதுக்கு கீழ் இருப்பின்

(B) less than 35 years of age
35 வயதுக்கு கீழ் இருப்பின்

(C) less than 21 years of age
21 வயதுக்கு கீழ் இருப்பின்

(D) less than 25 years of age
25 வயதுக்கு கீழ் இருப்பின்

56. Lease of immovable property of a religious institution for more than what years is required previous approval of the Government
அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்தினை எத்தனை ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடும் போது அரசின் முன் அனுமதி தேவைப்படுகிறது.

(A) 3
(B) 5
(C) 10
(D) 25

57. Bedget of Religious Institutions included in the list published under section 46 shall be sent to the
பிரிவு 46ன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறநிறுவனங்களின் உத்தேச வரவு செலவுத் திட்டத்தை யாருக்கு அனுப்ப வேண்டும்.

(A) Secretary
அரசுச் செயலர்
(B) Commissioner
ஆணையர்
(C) Joint Commissioner
இணை ஆணையர்
(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

58. Within which months after the close of each fasali year the statement of actual receipts and disbursements of the religious institutions must be sent to the appropriate authorities?
ஒரு பசலியாண்டு முடிவடைந்த எத்தனை மாதங்களுக்குள் ஒரு அறநிறுவனம் தன்னுடைய உண்மை வரவு செலவுக் கணக்குகளை உரிய அலுவலருக்கு அனுப்ப வேண்டும்?

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

59. Penalty for offences in connection with encroachment connected with section
ஆக்கிரமிப்பு தொடர்பான குற்றங்களுக்கு தண்டனை தொடர்புடைய சட்டப்பிரிவு

(A) 79B
79பி
(B) 79D
79டி
(C) 69C
69சி
(D) 69D
69டி

60. Section 48 relates to
பிரிவு 48 தொடர்புடையது

(A) Chairman
அறங்காவலர் குழுத் தலைவர்

(B) Hereditary trustee
பரம்பரை அறங்காவலர்

(C) Head of Mutt
மடாதிபதி

(D) Private temple
தனியார் கோயில்

61. Which of the following expenditure has not been mentioned in Section 35?
கீழ்கண்ட எந்த செவினம் பிரிவு 35ல் குறிப்பிடப்படவில்லை?

(A) Health
சுகாதாரம்

(B) Safety
பாதுகாப்பு

(C) Training of Archakas
அர்ச்சகர்களுக்கு பயிற்சி

(D) Gratuity
பணிக்கொடை

62. Fair rent fixation committee does not have the following officer as a member
கீழ்கண்ட அலுவலர்களுள் யார் நியாய வாடகை நிர்ணயக் குழுவில் உறுப்பினர் இல்லை?

(A) Commissioner
ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Executive Officer
செயல் அலுவலர்

(D) District Registrar
மாவட்டப் பதிவாளர்

63. Section 29 Register must be submitted once in how many years for alterations, omissions and additions?
பிரிவு 29ன் கீழ் தயாரிக்கப்பட்ட பதிவேட்டை திருத்தம், சேர்க்கை மற்றும் நீக்கம் ஆகியவற்றிற்காக எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை தாக்கல் செய்ய வேண்டும்?

(A) 2

(B) 3

(C) 5

(D) 10

64. Under which section Hindu Religious and Charitable Endowments Common Good Fund has beed created?
எந்தப் பிரிவின் கீழ் இந்து சமய அறக் கொடைகள் பொதுநல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது?

(A) 94

(B) 96

(C) 97

(D) 98

65. Under which section a public officer shall furnish copies of documents relating to a religious institution?
எந்தப் பிரிவின் கீழ் ஒரு பொது அலுவலர் தம்மிடமுள்ள ஒரு மத நிறுவனம் தொடர்புடைய ஆவணத்தை வழங்க கடமைப்பட்டுள்ளார்?

(A) 97 (B) 96
(C) 98 (D) 99

66. The time limit for appeal against the order of trustee under section 56 (2) is
பிரிவு 56(2)ன்படி ஒரு அறங்காவலரின் உத்தரவின் மீது மேல்முறையீடு செய்ய கால அவகாசம் எவ்வளவு?

(A) 1 month
ஒரு மாதம்
(B) 2 months
இரண்டு மாதங்கள்
(C) 45 days
45 நாட்கள்
(D) 90 days
90 நாட்கள்

67. The provisions for utilization of surplus funds for Hindu marriages is provided under section
எந்தப்பிரிவில் மிகை நிதியங்களை இந்து திருமணங்களுக்கு பயன்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது?

(A) 36A
36ஏ
(B) 36B
36பி
(C) 36C
36சி
(D) 36D
36டி

68. Under Section 65 who is empowered to settle schemes?
பிரிவு 65ன் கீழ் நிர்வாகத் திட்டம் தீர்வு செய்ய யாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) Secretary
அரசுச் செயலர்
(B) Commissioner
ஆணையர்
(C) Joint Commissioner
இணை ஆணையர்
(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

69. Who is empowered to pass appropriation order of endowments under section 66?
பிரிவு 66ன் கீழ் நிலைக் கொடைகளைப் பயன்படுத்துவதற்கான உத்தரவிடும் அதிகாரம் யாரிடம் உள்ளது?

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Secretary
அரசுச் செயலர்

70. Whose consent is necessary to institute a suit for removal of trustee of a math?
ஒரு மடத்தின் அறங்காவலரை நீக்குவதற்கான வழக்கு தாக்கல் செய்ய யாருடைய சம்மதம் அவசியமாகிறது?

(A) Secretary
அரசுச் செயலர்

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

71. Under which section Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Administration Fund has been created?
எந்தப் பிரிவின் கீழ் தமிழ்நாடு இந்து சமய அறநிலை நிர்வாக நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது?

(A) 94
(B) 95
(C) 96
(D) 98

72. In order to institute a suit for removal of trustee of math what is the minimum required number of persons having interest to apply?
ஒரு மடத்தின் அறங்காவலரை பதவி நீக்கம் செய்ய குறைந்தபட்சம் எத்தனை அக்கறையுள்ள நபர்கள் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்ய விண்ணப்பிக்க வேண்டும்?

(A) 2
(B) 3
(C) 5
(D) 10

73. Appeal against the lease rent fixation order has to be filed within how many days?
நியாய வாடகை நிர்ணய உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எத்தனை நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்?

(A) 30
(B) 60
(C) 120
(D) 90

74. Constitution of District Committee is provided under section
மாவட்டக் குழு கீழ்கண்ட எந்தப் பிரிவின் கீழ் அமைக்கப்படுகிறது?

(A) 7
7

(B) 7A
7ஏ

(C) 7B
7பி

(D) 7C
7சி

75. Who shall be the Chariman of the Advisory Committee?
ஆலோசனைக் குழுவின் தலைவராக யார் இருப்பர்?

(A) Chief Minister
முதலமைச்சர்

(B) Minister in charge of Hindu Religious and Charitable Endowments
இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்

(C) Secretary
அரசுச் செயலர்

(D) Commissioner
ஆணையர்

76. Who can appoint a trustee for a defunct religious institution?
ஒரு செயலிழந்து போன அற நிறுவனத்திற்கு அறங்காவலரை நியமிக்கும் அதிகாரம் யாருக்கு உண்டு?

(A) Secretary
அரசு செயலர்

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

77. The term 'religious institution' is defined under section
அற நிறுவனம் எனும் பதம் எந்தப் பிரிவில் வரையறை செய்யப்பட்டுள்ளது?

(A) 6(18)

(B) 6(16)

(C) 6(14)

(D) 6(20)

78. Who shall be the Member-Secretary of the Advisory Committee?
ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் செயலராக யார் இருப்பர்?

(A) Chief Secretary
தலைமைச் செயலர்

(B) Secretary to Government in charge of Hindu Religious and Charitable Endowments
இந்து சமய அறநிலையத் துறை அரசுச் செயலர்

(C) Commissioner
ஆணையர்

(D) Joint Commissioner
இணை ஆணையர்

79. Who can remove the non official member of the Advisory Committee?
ஆலோசனைக் குழுவின் அலுவல் சாரா உறுப்பினரை நீக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது?

(A) Government
அரசு

(B) Commissioner
ஆணையர்

(C) Additional Commissioner
கூடுதல் ஆணையர்

(D) Joint Commissioner
இணை ஆணையர்

80. Who is empowered to decide certain disputes and matters under Section 63?
பிரிவு 63ன் கீழ் சில குறிப்பிட்ட பிரச்சனைகள் மற்றும் விசயங்களைத் தீர்வு செய்யும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) Commissioner
ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Executive Officer
செயல் அலுவலர்

81. The matter of whether a trustee holds or held office as a hereditary trustee is decided under section
ஒரு அறங்காவலர் பரம்பவரை அறங்காவலரா என்று எந்தப் பிரிவின் கீழ் தீர்வு செய்யப்படுகிறது?

(A) 63a
63எ

(B) 63b
63பி

(C) 63c
63சி

(D) 63d
63டி

82. The term 'person having interest' is defined under section
அக்கறையுள்ள நபர் எனும் பதம் எந்த பிரிவில் வரையறை செய்யப்பட்டுள்ளது?

(A) 6(12)
(B) 6(13)
(C) 6(15)
(D) 6(17)

83. To whom the District Committee shall send panel of names of persons for the appointment of non-hereditary trustees to the temple published under Section 46(ii)?
சட்டப்பிரிவு 46(ii)ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட திருக்கோயிலுக்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் செய்வதற்கான பெயர் பட்டியலை மாவட்டக் குழு யாருக்கு அனுப்ப வேண்டும்.

(A) Commissioner
ஆணையர்
(B) Additional Commissioner
கூடுதல் ஆணையர்
(C) Government
அரசு
(D) Joint Commissioner
இணை ஆணையர்

84. What is the qualification prescribed under Section 25-A (b) to appoint a person as trustee?
சட்டப்பிரிவு 25-A(b)ன்படி அறங்காவலர் நியமனம் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதி

(A) Faith in God
கடவுள் நம்பிக்கை
(B) Citizen of India
இந்திய குடிமகன்
(C) Good Conduct
நல்ல நடத்தை
(D) Hindu Religion
இந்து மதம்

85. Under which Section a trustee disqualified if he is suffering from leprosy?
அறங்காவலர் ஒருவர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் எந்த பிரிவின் கீழ் தகவின்மை உடையவராகிறார்.

(A) Section 26(1)(a)
சட்டப்பிரிவு 26(1)(a)
(B) Section 26(1)(e)
சட்டப்பிரிவு 26(1)(e)
(C) Section 26(1)(b)
சட்டப்பிரிவு 26(1)(b)
(D) Section 26(1)(c)
சட்டப்பிரிவு 26(1)(c)

86. Under which Section the trustee of the temple shall cease to hold office if he absents himself from 3 consecutive meeting of Board of Trustees.
அறங்காவலர் குழு தொடர் கூட்டத்திற்கு தொடர்ச்சியாக மூன்று முறை வராதிருப்பின் எந்த சட்டப்பிரிவின் கீழ் அவரது பதவி அற்றுப்போகும்.

(A) Section 26(6)
சட்டப்பிரிவு 26(6)

(B) Section 26(4)
சட்டப்பிரிவு 26(4)

(C) Section 26(5)
சட்டப்பிரிவு 26(5)

(D) Section 26(3)
சட்டப்பிரிவு 26(3)

87. Under which Section the trustees shall not spend funds of the temple in any disciplinary proceeding against him?
அறங்காவலர் தன் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக எந்த சட்டப்பிரிவின்படி திருக்கோயில் நிதியை செலவிடக் கூடாது.

(A) Section 28(1)
சட்டப்பிரிவு 28(1)

(B) Section 27
சட்டப்பிரிவு 27

(C) Section 28(3)
சட்டப்பிரிவு 28(3)

(D) Section 28(2)
சட்டப்பிரிவு 28(2)

88. Under which Section the Joint Commissioner may supercede the Hereditary Trustee if he has acted adverse to the interest of the temple?
திருக்கோயிலுக்கு எதிராக செயல்படும் அறங்காவலரை எந்த சட்டப்பிரிவின் கீழ் இணை ஆணையர் நீக்கி விடலாம்

(A) Section 26(3)
சட்டப்பிரிவு 26(3)

(B) Section 26(4)
சட்டப்பிரிவு 26(4)

(C) Section 26(1)
சட்டப்பிரிவு 26(1)

(D) Section 26(2)
சட்டப்பிரிவு 26(2)

89. The word Joint Commissioner was added in Section 27 by which Act.
எந்த தமிழ்நாடு சட்டத்தின்படி பிரிவு 27-ல் இணை ஆணையர் என்ற வார்த்தை சேர்க்கப்பட்டது.

(A) Tamil Nadu Act 50/2002
தமிழ்நாடு சட்டம் 50/2002

(B) Tamil Nadu Act 39/96
தமிழ்நாடு சட்டம் 39/96

(C) Tamil Nadu Act 42/78
தமிழ்நாடு சட்டம் 42/78

(D) Tamil Nadu Act 18/93
தமிழ்நாடு சட்டம் 18/93

90. Authority to appropriate to portion of surplus funds for feeding the poor
ஏழைகளுக்கு உணவு அளிப்பதற்காக உபரி நிதியை பயன்படுத்த அதிகாரம் பெற்றவர்

(A) Inspector
ஆய்வர்

(B) Temple staff
திருக்கோயில் பணியாளர்

(C) Trustee
அறங்காவலர்

(D) Assistant Commssioner
உதவி ஆணையர்

91. Authority to determine the amount payable to the trustee for the failure to perform the charity in respect of specific endowment attached to math.
மடத்துடன் இணைந்த குறித்த வகை நிலைக் கொடையை செய்ய தவறியதற்காக அறங்காவலருக்கு செலுத்த வேண்டிய தொகையை நிர்ணயம் செய்ய அதிகாரம் படைத்தவர் யார்?

(A) Additional Commissioner
கூடுதல் ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Government
அரசு

(D) High Court
உயர்நீதிமன்றம்

92. Under which Section the Government may order resumption and regrant of inam granted for performance of service to a temple
எந்த சட்டப்பிரிவின் கீழ் பணி செய்வதற்காக அளிக்கப்பட்ட இனாமை திரும்ப பெற்றுக் கொண்டு திரும்ப அளிப்பது தொடர்பாக அரசால் உத்தரவு பிறப்பிக்கலாம்

(A) Section 40(1)
சட்டப்பிரிவு பிரிவு 40(1)

(B) Section 40(4)
சட்டப்பிரிவு பிரிவு 40(4)

(C) Section 40(2)
சட்டப்பிரிவு பிரிவு 40(2)

(D) Section 41(1)
சட்டப்பிரிவு பிரிவு 41(1)

93. Who can order specially regarding possession of jewels with employees of the temple?
திருக்கோயிலுக்கு சொந்தமான ஆபரணங்களை சிறப்பு ஆணை வாயிலாக திருக்கோயில் பணியாளர் உடைமையில் வைத்திருக்க யார் ஆணையிடலாம்.

(A) Additional Commissioner
கூடுதல் ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Government
அரசு

(D) Joint Commissioner
இணை ஆணையர்

94. Under which Section Executive Officer may be appointed to the temples under the control of a Math.
எந்த சட்டப்பிரிவின் கீழ் மடங்களின் கீழுள்ள கோயில்களில் நிருவாக அலுவலரை அமர்த்தலாம்.

(A) Section 43(A)
சட்டப்பிரிவு பிரிவு 43(அ)

(B) Section 58(A)
சட்டப்பிரிவு பிரிவு 58(அ)

(C) Section 53(A)
சட்டப்பிரிவு பிரிவு 53(அ)

(D) Section 44(A)
சட்டப்பிரிவு பிரிவு 44(அ)

95. To which religious institutions the Commissioner has no power to appoint Executive Officer under Section 45 of the Act.
சட்டப்பிரிவு 45ன்படி எந்த சமய நிறுவனங்களுக்கு செயல் அலுவலரை நியமிப்பதற்கு ஆணையருக்கு அதிகாரம் இல்லை

(A) Charitable Endowment
அறநிலையக் கொடை

(B) Religious Charity
சமய அறப்பணி

(C) Maths
மடம்

(D) Specific Endowment
குறித்த வகை நிலைக்கொடை

96. Authority to publish list of temples under Section 46 of the Act
சட்டப்பிரிவு 46ன் கீழ் திருக்கோயில்களை பட்டியலிட்டு பிரசுரம் செய்வதற்கு அதிகாரம் படைத்தவர் யார்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Deputy Commissioner
துணை ஆணையர்

(C) Additional Commissioner
கூடுதல் ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

97. In which year Section 25-A has inserted in the HR and CE Act?
எந்த வருடம் சட்டப்பிரிவு25-A இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் புகுத்தப்பட்டது.

(A) 2012

(B) 2011

(C) 2013

(D) 2010

98. On which date the assent of the president to the Hindu Religious and Charitable Endowment Act 1959 was received?
1959ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் எந்த தேதியில் குடியரசு தலைவரின் இசைவினை பெற்றது?

(A) 19.11.1959 (B) 19.09.1959
(C) 19.10.1959 (D) 19.12.1959

99. Maximum number of trustees to be appointed to the non-listed temple from the panel of names sent by the District Committee.
பட்டியலில் சேராத திருக்கோயில்களில் அறங்காவலர்கள் நியமனம் செய்வதற்காக மாவட்ட குழுவால் அனுப்பப்படும் பெயர் பட்டியலில் அதிக பட்சம் எத்தனை பேர் நியமனம் செய்யலாம்.

(A) 2 (B) 5
(C) 1 (D) 3

100. The authority to suspend trustee of the temple published under Section 46(iii)
சட்டப்பிரிவு 46(iii) கீழ் பிரசுரம் செய்யப்பட்ட திருக்கோயில் அறங்காவலர்களை இடைநீக்கம் செய்ய அதிகாரம் படைத்தவர்

(A) Government
அரசு
(B) Additional Commissioner
கூடுதல் ஆணையர்
(C) Commissioner
ஆணையர்
(D) Sub Court
சார்பு நீதிமன்றம்

---